# உலகத்தைக் தலைகீழாக்குதல் [17:6]

*தெசலோனிக்கேயில் யூதர்கள், கிறிஸ்தவர்களை அதிகாரிகள் முன்னிலையில் இழுத்து சென்ற போது, பின்வரும் குற்றச்சாட்டைக் கூறினார்கள்: "உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள்" (17:6).*[1] *இந்த வார்த்தைகள் நம்மைக் குற்றம் சாட்டுகின்றன. நாம் இந்த உலகத்தைக் ''தலைகீழாக மாற்றியிருக்கின்றோமா?'' நாம் ஒரு சிறு அளவாவது அசையச் செய்திருக்கின்றோமா? முதல் நூற்றாண்டு சபையை இன்றைய நாட்களில் உள்ள சபையோடு ஒப்பிடுவது என்பது, காதுகளைச் செவிடாக்கும் ஒலியுடைய அணு வெடி முழக்கத்துடன், சற்றும் குறிப்பிடத் தக்கதல்லாத விளை யாட்டுத் துப்பாக்கியின் ஒலியை ஒப்பிடுவது போன்றதாகும் என்று* Don Willingham *தம் பிரசங்க சுருக்கத்தில் கூறியுள்ளார்.*

*"ஆதி சபையார் தாங்கள் செய்ததை நிறைவேற்ற முடிந்தது ஏன் என்பதை நாம் அறிந்தால் மட்டுமே, அதே போன்ற செயலை நாமும் செய்ய முடியும்" என்று நாம் மறுக்கலாம். ஆதி சபையாரின் பலத்தினுடைய "இரகசியத்தை" கண்டு பிடிப்பது அப்படியொன்றும் கடினமானதல்ல. நடபடிகள் புத்தகத்தை மேம்போக்காகப் படித்தால் கூட, அவர்களுக்கு வெற்றியைத் தேடித்தந்த அவர்களின் மனப்பான்மை வெளிப்படுத்தப்படும்.*

## கிறிஸ்தவத்தைப் பற்றிய மனோபாவம்

*கிறிஸ்தவம் என்பது ஆதி கிறிஸ்தவர்களுக்கு, உணர்வுகள் விடுதலையாகும் வழியாகவோ அல்லது அவர்களின் வாழ்க்கை யிலிருந்து புறம்பேயிருந்த சில செயல்களாகவோ இருந்த தில்லை; அது அவர்களின் மெய்யுணர்வாக இருந்தது. அது வாழ்க்கையின் ஒரு வழியாக மட்டும் இல்லை, மாறாக வாழ்க்கையின் வழியாகவே இருந்தது. அது குறிப்பிட்ட சில*

*சூழ்நிலைகளை மட்டும் உற்று நோக்குவதற்குரிய வழியாய் இராமல், எல்லாச் சூழ்நிலைகளையும் உற்று நோக்கும் குறிப் பிட்ட ஒரு வழியாய் இருந்தது (கலா. 2:20). இதன் விளைவாக, ஆதிக் கிறிஸ்தவர்கள், தங்களிடம் இருந்த எல்லாவற்றையும் கொடுக்க விருப்பமுள்ளவர்களாய் இருந்தார்கள்: அவர்கள் தங்களின் உடைமைகளை விற்று, மற்றவர்களுக்குக் கொடுத் தார்கள் (அப். 5). அவர்கள் தங்கள் வீடுகளை, தங்கள் குடும்பங் களை, தங்கள் வேலைகளை விட்டு விட்டார்கள் (அப். 8). சிலர் தங்கள் உயிரையே கூட கொடுத்தார்கள் (அப். 7; 12). இதன் விளைவாக சபையானது சற்றும் தளராமல் வளர்ந்தது.*

*"ஆனால் தேவன் உறுதியாகவே, அந்த அளவுக்கு நம்மிடத் தில் எதிர்பார்ப்பதில்லை!" என்று நீங்கள் நினைக்கலாம். அதை எப்படி நீங்கள் அறிகின்றீர்கள்? உங்களைப் பொறுத்தமட்டில் கிறிஸ்தவத்தின் அர்த்தம் என்ன? அது உலகம் முழுவதும் சென்றடைவதைக் காண்பதற்குத் தியாகம் எதையாவது செய்ய நீங்கள் விருப்பமாயிருக்கின்றீர்களா?*

## வாழ்க்கையைப் பற்றிய மனோபாவம்

*கிறிஸ்தவத்தைப் பற்றிய ஆதிக் கிறிஸ்தவர்களின் மனோ பாவமானது வாழ்க்கையைப் பற்றிய அவர்களின் மனோபாவத் தில் நல் விளைவுகளை ஏற்படுத்தியது. அவர்கள் இயேசுவுக்குள் ஒரு புதிய வாழ்க்கையைப் பெற்றிருந்தார்கள் (ரோமர் 6:3-6), மற்றும் அவர்கள் அதை மிகவும் வினயமானதாக எடுத்துக் கொண்டார்கள் (அப். 19:19, 20). இணக்கமாகிச் செல்வ தென்பது எதுவும் இருக்க முடியாது. நன்கு ஆராய்ந்த அதிகார முடையவர்களில் குறைந்த பட்சம் ஒருவராவது, ஆதிசபையில், தகுந்த காரணமின்றி ஒருவர் தொடர்ந்து மூன்று வாரங்கள் ஆராதனைக்கு வராதிருந்தால் அவர் தாமாகவே ஐக்கியத்தை விட்டு விலக்கப்பட்டார்கள்[2] என்று கூறியிருக்கின்றார்.*

*இந்த உலகத்தில் இருக்கின்றவர்கள், நம்மை இந்த உலகத் தின் செயல்பாடுகளிலிருந்து வித்தியாசமாகச் செயல்படுகின் றவர்களாகக் காணாத வரையிலும் நாம் இந்த உலகத்தினர் மீது வலிவான விளைவுகள் ஒன்றையும் ஏற்படுத்தி விட முடியாது! அநேக ஆண்டுகளுக்கு முன்னதாக, ஒரு ஊழியக்காரர்,*

இந்தியர்களின் ஆறு இனங்களின் குழுத்தலைவர் ஒருவரிடத்தில், அவர்கள் மத்தியில் ஊழியத்தைத் தொடங்குவதற்கு வேண்டுகோள் விடுத்தார். அதற்கான பதிலானது ஒரு உரையின் வடிவத்தில் இருந்தது. அதன் சாரம் இதோ:

> சகோதரரே, இவ்விடத்தில் உள்ள வெள்ளையர்களுக்கு நீங்கள் பிரசங்கிக்கிறீர்கள் என்று உங்களைப் பற்றி எங்களுக்குக் கூறப்பட்டுள்ளது. இந்த மக்கள் எங்கள் அயலகத்தார்கள் ஆவார்கள். அவர்களுடன் எங்களுக்குப் பழக்கம் உண்டு. நாங்கள் இன்னும் சற்றுப் பொறுத்திருந்து, உங்கள் பிரசங்கமானது அவர்களிடத்தில் என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்று காணுவோம். அது அவர்களிடத்தில் நன்மையைச் செய்ததென்று காணப்பட்டால், அது அவர்களை நேர்மையானவர்களாக, இந்தியர்களை ஏமாற்றாதவர்களாகச் செய்ததென்றால், நீங்கள் கூறியதை மறுபடியும் நாங்கள் பரிசீலனை செய்வோம்.

## மற்றவர்களைப் பற்றி மனோபாவம்

நானும் ஜோவும் திருமணம் செய்து கொள்வதற்கு முந்திய ஆண்டில் நான் டெக்ஸாஸில் உள்ள அபிலைன் என்ற நகரில் வசித்து வந்தேன், அவள் ஓக்லஹாமாவில் உள்ள மூர் என்ற நகரில் வசித்து வந்தாள். இவ்விரு இடங்களுக்குமிடையில் அநேக கடிதங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. நான் எழுதிய ஒரு கடிதத்தை நான் மிகத் தெளிவாக நினைவு கூருகின்றேன்: நான் என்ன எழுதியிருந்தாலும், அவள் எப்பொழுதும், “வரிகளுக்கிடையே படித்து” அவள் மீது நான் கொண்டுள்ள அன்பைப் புரிந்து கொள்ள முடியும் என்று நான் நம்பியதாக எழுதியிருந்தேன். அத்துடன், “இந்தக் கடிதத்தில் உனது கற்பனையை நீ பயன்படுத்தத் தேவையிருக்காது” என்றும் கூட எழுதியிருந்தேன். பிறகு சிவப்பு மையுள்ள பேனா ஒன்றை நான் எடுத்து, அக்கடிதத்தின் எல்லா வரிகளுக்கும் இடையில் “நான் உன்னை நேசிக்கின்றேன், நான் உன்னை நேசிக்கின்றேன், நான் உன்னை நேசிக்கின்றேன்” என்று எழுதினேன். “அன்பு” என்ற வார்த்தை நடபடிகள் புத்தகத்தில் காணப்படாமலிருக்கலாம்,

ஆனால் இப்புத்தகத்தின் ஒவ்வொரு வரிக்கிடையிலும் தேவன் மனிதர்கள்மேல் கொண்ட அன்பும், ஆதிக்கிறிஸ்தவர்கள் தேவன் மேலும் மற்றவர்கள் மேலும் கொண்டிருந்த அன்பும் எழுதப்பட்டுள்ளது.

விக்கிரகாராதனைக் கூட்டத்தார் அல்லது புறதெய்வங்களை வழிபடுவோருக்கு, கிறிஸ்தவத்தின் இந்தப் பண்பானது மிகவும் திகைப்பளிக்கக் கூடியதாய் இருந்தது. புறதெய்வ வழிபாட்டு உலகத்தில் ‘‘நாய் நாயைத் தின்னும் நிலை’’ இருந்தது: கீழ் நிலையில் இருப்பவர்களை உதைத்துத் தள்ளுதல்; வியாதியஸ்தர் மற்றும் உதவியற்ற நிலையில் உள்ளவர்களைக் கண்டும் காணாதிருத்தல்; விரோதிகளைத் திருப்பித் தாக்குதல் ஆகிய செயல்பாடுகள் மலிந்திருந்தன. இதற்கு முரண்பட்ட வகையில், கிறிஸ்தவர்கள் அன்பு காட்டினார்கள். ரோமாபுரியானது ஒரு பட்டயத்துடன் கிறிஸ்தவத்தைச் சந்தித்தது, ஆனால் கிறிஸ்தவமோ அன்புடன் ரோமாபுரியை எதிர்கொண்டு, அதை வெற்றி பெற்றது. ரிட்ஜ்பாத் என்ற வரலாற்றாளர், ஆதி சபையின் ஆக்கபூர்வமான வளர்ச்சிக்கு இதுவே காரணம் என்று நம்பினார்.

இன்றைய நாட்களில் நாமும் அதே போன்ற போட்டிகள் நிறைந்த, “முதல் தரமாய் இருக்கும் தத்துவத்தைத் தேடும்” ஒரு சமூகத்தில்தான் வாழ்கின்றோம். ஆயினும் உண்மைக் கிறிஸ்தவர்கள் இன்னமும் ஊக்கத்துடன் உற்று நோக்குகின்றவர்களாகவே இருக்கின்றார்கள்.

## போதனையைப் பற்றிய மனோபாவம்

மற்றவர்களைப் பற்றிய மனோபாவத்தின் விளைவாக, ஆதிக் கிறிஸ்தவர்கள் தாங்கள் சந்தித்த எல்லாரிடமும் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள இயல்பாகவே விரும்பினார்கள் (மத். 28:18-20;[3] அப். 8:1, 4). ஆதிக் கிறிஸ்தவர்களின் வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணம் இது தான் என்று பிலிப் ஸ்காஃப் அவர்கள் கூறினார்:

> கிறிஸ்தவமானது நிலைநாட்டப்பட்ட உடனேயே அது மிகச் சிறந்த ஊழியக்காரராயிற்று. அது தனக்குள்ளாகவே

இருந்து இயல்பாகவே வளர்ந்தது. அது தனது பிரசன்னத்தினாலேயே அநேக மக்களைக் கவர்ந்தது. ... ஒவ்வொரு உள்ளூர் சபையும் ஒரு ஊழியச் சமூகமாகவும், ஒவ்வொரு கிறிஸ்தவ விசுவாசியும் ஒரு ஊழியக் காரராகவும் தங்கள் சகமனிதர்களை மனமாற்றமடையச் செய்யும் செயல்பாடு என்ற கிறிஸ்துவின் அன்பில் பற்றியெரியும் அக்கினியாய் இருந்தார்கள். ... செல்ஸஸ் அவர்கள் பரிகாசமாய்க் குறிப்பிடுகின்றபடி, கம்பளி மற்றும் தோல் ஆகியவற்றில் விடாப்பணி செய்கின் றவர்கள் போல, கேடுபாடும் அறியாமையும் கொண் டிருந்த நபர்களே கிறிஸ்தவத்தை மிகுந்த வைராக்கியத்து டன் பரப்புபவர்களாக மாறினார்கள், ... பெண்களும், அடிமைகளும் இதை வீட்டு வட்டாரங்களில் அறிமுகப் படுத்தினார்கள். ... ஒவ்வொரு கிறிஸ்தவரும் இதைத் தம் அயலகத்தாருக்குக் கூறினார், ஒரு தொழிலாளி தம் உடன் தொழிலாளிகளிடம் இதைப் பற்றிக் கூறினார், ஒரு அடிமை தம் உடன் அடிமைகளிடம் இதைப் பற்றிக் கூறினார், ஊழியக்காரன் தன் எஜமான் மற்றும் எஜமானி களிடத்திலும், தனது மனமாற்றத்தின் வரலாற்றை, மாலுமி கப்பற்சேதத்திலிருந்து தப்பித்த வரலாற்றைக் கூறுவது போல அவர்கள் கூறினார்கள்.

அப்போஸ்தலர்கள் தங்கள் உபதேசத்தினால் எருசலேமை நிரப்பியதாகச் சனகெரீன் சங்கத்தார் கூறினார்கள் (அப். 5:28). நாம் உலகத்தை, நமது நாட்டை, நமது மாநிலத்தை, நமது நகரத்தை, குறைந்தபட்சம் நமது அயலகத்தை சுவிசேஷத்தால் நிரப்பியிருக்கின்றோமா?

## ஜெபத்தைப் பற்றிய மனோபாவம்

இந்தக் கடைசிக் காரணியைக் குறிப்பிடாமல் இருந்தால், கிறிஸ்தவம், அவர்களின் வாழ்க்கை, மற்றவர்கள், போதனை ஆகியவற்றைப் பற்றிய ஆதிக் கிறிஸ்தவர்களின் மனோபாவ மானது ஒன்றுமில்லாததாகி விடும். அவர்கள் தாங்கள் தேவனைச் சார்ந்திருந்ததை உணர்ந்தார்கள் (4:24, 29). நாம் ஜெபிக்கும் மக்கள் என்று அறியப்பட்டிருக்கின்றோமா? இல்லையென்றால், நாம் மனந்திரும்பும்படி - அவரைச் சார்ந்திருக்க அறியும்படி - தேவன் நமக்கு உதவுவாராக!

# முடிவுரை

*கடைசி மறுப்பொன்று என் காதுகளில் விழுகின்றது: "ஆனால் அன்று செயல்கள் என்பது இன்றைய நாட்களை விட மிகவும் சுலபமாய் இருந்ததால் அவர்கள் அதிக வெற்றியடைந் தார்கள்!" இப்படியிருந்ததா? இளம் சபைகளுக்குக் கடிதங்கள் என்ற நூலில் J.B. பிலிப்ஸ் அவர்கள் தமது முன்னுரையில் கொடுத்துள்ள பின்வரும் வார்த்தைகளைக் கவனியுங்கள்:*

> *களைப்படையச் செய்யும் வரலாற்று விபரங்களுக்குச் செல்லாமல், எழுதப்பட்ட இந்தக் கடிதங்களில் காணப் படும் வாழ்க்கைகள் வாழப்பட்டவைகளைச் சுட்டிக் காட்டுகின்றன என்பதையும், அதுவும் புறதெய்வ வழிபாட்டுப் பின்னணியில் வாழப்பட்டன என்பதையும் நாம் நினைவு கூர வேண்டும். அன்று சபைகளோ, [உலகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்ட] ஞாயிற்றுக் கிழமைகளோ, விசுவாசத்தைப் பற்றிய புத்தகங்களோ இல்லை. அடிமைத்தனம், பாலியல் ஒழுக்கக்கேடு, கொடுமை, மனிதர்களின் உபத்திரவங்கள் பற்றிய உணர் வின்மை, பொதுக் கருத்தின் கீழான தரம் ஆகியவை உலகளாவியதாக இருந்தது; பயணமும், செய்தித் தொடர்பும் அரிதானதாகவும், அழிவு ஏற்படுத்துவதாக வும் இருந்தன; மக்களில் பெரும்பாலோர் கல்வியறிவு இல்லாதவர்களாவே இருந்தார்கள். இன்றைய நாட்களில் அநேக கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவ மார்க்கமானது வேரூன்றுவதற்கு முன்பிருந்த நிலையைக் காட்டிலும் நல்ல சூழ்நிலையை நாம் பெறக் காத்திருக்க வேண்டும் என்பது போன்ற தோரணையுடன், "நமது நாட்களில் இடர்பாடுகள்" என்பதைப் பற்றிப் பேசுகின்றார்கள். ஒரு சில வாரங்களில் உயிர் பறிக்கப்படும் என்ற மிகவும் ஆபத்துள்ள நிலைமைகளில்தான் விசுவாசமானது வேரூன்றி, மலர்ந்து செழித்தது என்ற வியத்தகு உண்மையை அறியும்போது நமது இருதயம் நெகிழ்ந்து போகின்றது. இந்த ஆதி கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் மூலம் தாங்கள் நம்பிக்கையுடன் அனலாயிருந்தார்கள். தேவனுடைய பிள்ளைகளான அவர்கள் ஒரு புதிய மனிதகுலத்தின் முன்னோடிகள் ஆனார்கள், ஒரு புதிய இராஜ்யத்தைத் தோற்றுவித்தவர்களானார்கள். அநேக நூற்றாண்டுகளினுடே அவர்கள் இன்னமும் நம்முடன்*

*பேசிக் கொண்டிருக்கின்றார்கள். ஒருவேளை, அவர்கள் விசுவாசித்ததை நாமும் விசுவாசித்தால், அவர்கள் சாதித்ததை நாமும் சாதிக்கலாம்.*

மனோபாவம்தான் இன்றைய நாட்களில் நமது பிரச்சனையாக உள்ளது. நரகத்திற்குச் செல்லும் வழியில் இலட்சக்கணக்கானவர்கள் இருக்கின்றார்கள், அநேகர் அதைப் பற்றிக் கவலை கொள்வதில்லை. ஒரு காலத்தில் இயேசுவை அரவணைத்துக் கொண்டவர்கள், உலகம் அவர்களை இழுத்துச் செல்ல அனுமதித்து விட்டார்கள், அநேகர் அதைப் பற்றியும் கவலைப்படுவதில்லை. தேவனே! கவலைப்பட எங்களுக்கு உதவி செய்யும்!

குறிப்புகள்

[1]"நேர்மையான இருதயங்களைத் தேடுதல்" என்ற முந்தின கட்டுரையில் 17:6க்கான குறிப்புகளைக் காணவும். [2]அப். 5:13, 14 வசனப்பகுதியானது ஆதி சபையின் பலத்த ஒழுங்கு நடவடிக்கையின் விளைவைக் கூறுகின்றது. [3]பிரதான கட்டளையில் நான்கு "சகல" ங்கள் உள்ளதைக் கவனியுங்கள்: சகல அதிகாரம், சகல ஜாதிகள், இயேசு கட்டளையிட்ட"யாவையும்", மற்றும் சகல நாட்களிலும்.